<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்</u>

<u>**OS**. **No**. 267/2020</u>

<u>**P**.**W**.1 நாள் - 22.02.2022</u>

பெயர் : முருகேசன்

த/பெயர் : கிருஷ்ணம்பிள்ளை

<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மின் இணைப்பு எனக்கு வழங்கமுடியாது என்று பிரதிவாதிகள் சொன்னதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு மின் இணைப்பு வழங்கமுடியாது என்று உதவி செயற்பொறியாளரும், கண்காணிப்பு பொறியாளரும் சொன்னார்கள். 1,2 பிரதிவாதிகள் மின் இணைப்பு வழங்கமுடியாது என்று சொன்ன பிறகு 3 ம் பிரதிவாதி மின் இணைப்பு கொடுக்காலம் என்று சொன்னார்கள். 4 ம் பிரதிவாதிக்கு என்னுடன் கூட்டு பங்கு உள்ளது. 4 ம் பிரதிவாதிக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் எழுத்துமூலமாக எனக்கு மின் இணைப்பு வழங்கமுடியாது என்று உத்தரவு எதுவும் வழங்கவில்லை. நான் சர்வீஸிற்கு விண்ணப்பம் கொடுத்தபோது 4 ம் பிரதிவாதியிடம் சம்மத கடிதம் எதுவும் வாங்கிகொடுக்கவில்லை. எனக்கும் 4 ம் பிரதிவாதிக்கும் பங்காளி உறவுமுறை ஆகும். எனது சின்ன பாட்டனாரும், 4 ம் பிரதிவாதியின் சின்ன பாட்டனாரும் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சர்வீஸ் வாங்க கோரும் கிணற்றில் எனக்கு 1 பங்கு உள்ளது, 4 ம் பிரதிவாதிக்கு 1 பங்கு உள்ளது. ஏற்கனவே மேற்படி கிணற்றில் கூட்டு பங்கு சர்வீஸ் இல்லை என்றால் சரிதான். மேற்படி கிணற்றின் நடுவில் தண்டுகரை இல்லை. மேற்படி கிணற்றில் எங்களுக்கும் அவர்களுக்கும் ஒரு நாள் விட்டு நீர் இறைக்கும் பாத்தியம் உள்ளது. எனது நிலமும், 4 ம் பிரதிவாதியின் நிலமும் அழுந்த உள்ளது. கிணறு சம்மந்தப்பட்டது மொத்தம் 1 ½ ஏக்கர் தான். அதில் பேர்பாதி எனக்கும், 4 ம்

பிரதிவாதிக்கும் உள்ளது. எங்களுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நானும், 4ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் எழுதிகொள்ளவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் வரை நீர்இறைப்பது சம்மந்தமாக எங்களுக்குள் எந்தவித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 வருடங்களுக்கு முன்பு 4ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நான் மேற்படி சொத்தில் மகசூல் செய்யவில்லை, பிரதிவாதி மகசூல் செய்து வருகிறார். அதற்கு முன்னிட்டு நான் பருத்தி, மரவள்ளி கிழங்கு, சோளம் பயிரிட்டிருநதேன். தற்போது நான் மானாவாரி பருத்தி பயிரிட்டுள்ளேன். நான் பூந்தோட்ட சர்வீஸ் இணைப்பு வழங்குவதற்காக விண்ணப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது காட்டில் நான் மானாவாரி பயிர் செய்து கொண்டு பூந்தோட்ட இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்ததால் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் மின் இணைப்பு வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் எனது கூட்டு பங்குதாரர்களிடம் அனுமதி பெறாமல் நான் தனிப்பட்ட முறையில் விண்ணப்பம் செய்ததாலும் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தோட்டம் வருவாய் துறையில் அடங்கல் கணக்கில் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் கொடுக்கும் போது கிராம நிர்வாக அலுவலரிடம் பூந்தோட்ட பயிறுக்கேற்ற நிலத்திற்கு சர்வீஸ் வேண்டுமென்று கேட்டு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் மின் இணைப்பு கேட்டு கொடுத்த விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்கமுடியாது என்று உதவி செய்பொறியாளர் கடிதம் அனுப்பியதற்கு பின்னிட்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். உதவி செய்பொறியாளர்அனுப்பிய கடிதத்தின் பேரில் நான் கண்காணிப்பு பொறியாளரிடம் எழுத்து பூர்வமாக மனு கொடுத்தேன். மேற்படி மனுவை நீதிமன்றத்தில் ஆதரவாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

சொல்வதை போல நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றாலும். 4 ம் பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிணற்றில் கூட்டு பங்கு இல்லை என்றால் சரியல்ல. புதிய உரிமையை உருவாக்குவதற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா கிணற்றில் உரிய பங்கு இருந்திருந்தால் தகுந்த ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

(4 ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)